**கோ.ம.சா.1–கோமதி** **L.A.O.P.No.438/2022** **09.09.2025**

**கோ.ம.சா. 2, 3–ம் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

எனது நிலத்தில் பருத்தி, நெல், சோளம் ஆகியவை பயிர் செய்ததற்கு ஆதாரமாக வருவாய் துறையில் பயிர் அடங்கல் போன்ற ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த ஆர்ஜித சொத்திற்கு கிணற்று பாசன வசதி உண்டா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் S.L.R கோ.சா.ஆ.2 பட்டா சண்முகவேலம்மாள் பெயரில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்து மணிப்பாறைபட்டி கிராமத்தில் பட்டா எண்.133ன் படி உள்ளது என்றால் சரிதான். நான் சண்முகவேலம்மாள் பெயரில் கோ.சா.ஆ.3ன்படி பட்டா ஏற்பட்டதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கோ.சா.ஆ.3ல் சர்வே எண்.265ற்கு பட்டா எண். 186 என்றும், அது இ.குமாரலிங்கம் கிராமத்தில் உள்ளது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். கோ.சா.ஆ.3 பட்டா நான் எங்கிருந்து பெற்றேன் என்றால் என் வீட்டில் வைத்திருந்தேன். அந்த பட்டா நகலை நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். கோ.சா.ஆ.3 10(1) அடங்கல் நகல் 19.09.2015ல் இ.சேவை மையத்தில் பெறப்பட்டதா என்றால் நான் இ.சேவை மையத்திற்கு செல்லவில்லை. கோ.சா.ஆ.3 ஆவணத்தை யார் எனக்கு எடுத்து கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோ.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்தும், கோ.சா.ஆ.3ல் உள்ள சொத்தும் வெவ்வேறானது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. கோ.சா.ஆ.3 10(1) அடங்கல் பட்டாவை யார் வழக்கறிஞரிடம் கொடுத்தது என்றால் என் அண்ணன் மகன் ரவி கொடுத்தார். அவர் என்னுடன் வழக்கு விசாரணைக்கு 2, 3 தடவை வந்துள்ளார். கோ.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் சண்முகவேலம்மாள் என்பவர் கருப்பம்மாள் என்பவருக்கு 29.04.1959ல் பத்திர எண்.734 ஆக எழுதிக்கொடுத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். கோ.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. கோ.சா.ஆ.4 செட்டில்மெண்டில் பத்திரத்தில் எனது தாயார் கருப்பம்மாளும், பாட்டி சண்முகவேலம்மாளும் மணிப்பாறைபட்டி கிராமத்தில் ஒரே விலாசத்தில் குடியிருப்பதாக காட்டியுள்ளது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் படி எனது தாயரும், எனது பாட்டியும் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி

செட்டில்மெண்ட் சொத்து மணிப்பாறை பட்டி கிராமத்தில் சர்வே எண்.313ல் 36 செண்டும், சர்வே எண்.396ல் 2 ஏக்கர் 22 செண்டும் ஆக மொத்தம் 2 ஏக்கர் 58 செண்டு தானம் கொடுத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். கோ.சா.ஆ.4ல் சர்வே எண்.313 மற்றும் 396ம் சேர்ந்து 2 ஏக்கர் 58 செண்டு என்று கண்டுள்ளது. ஆனால் கோ.சா.ஆ.2ல் 396க்கு 2 ஏக்கர் 52 செண்டு என்றும், இரண்டும் மணிப்பாறைப்பட்டி கிராமத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். கோ.சா.ஆ.2 முதல் கோ.சா.ஆ.4ற்கான சொத்தை கருப்பம்மாள் அனுபவத்ததாக நான் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு தீர்வை என்னுடைய தாயார் பெயரில் கட்டியுள்ளேனா என்றால் என் தாயார் பெயரில் இல்லை. நான் சில சில வருடம் தீர்வை செலுத்தினேன். நான் தீர்வை செலுத்தியதற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் எழுதிய பின்பு எனது சித்தப்பா சோலைச்சாமி எனது தகப்பனாருக்கு கோ.சா.ஆ.7ன்படி 29.04.1959ல் பத்திர எண்.29/59 ன்படி விடுதலை பத்திரம் எழுதப்பட்டதில் சொத்துவிபரம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் மொத்த சொத்திற்கும் விடுதலை எழுதப்பட்டது. மேற்படி விடுதலை பத்திரம் எழுதிய காலத்தில் சோலைச்சாமிக்கும், சேதுராஜ தேவருக்கும் இடையே எதுவும் பிரச்சனை இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விடுதலை பத்திரத்தில் எனது சித்தப்பா சோலைச்சாமி என்பவர் எனது தகப்பனார் சேதுராஜ்க்கு எதற்காக விடுதலை கொடுத்தார் என்று சொன்னால் அவருக்கு செய்யவேண்யவை அனைத்தும் எனது அப்பா செய்து விட்டார். அதனால் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார். மேற்படி விடுதலை பத்திரம் யார் தயார் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சித்தப்பா என் தகப்பனாருக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்த சொத்துக்கள் என்னென்ன சொத்துக்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. யார் சொத்தில் எனது சித்தப்பா விடுதலை பத்திரம் கொடுத்தார் என்று சொன்னால் என் பாட்டி சொத்தை பொறுத்து எனது சித்தப்பா விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார். மேற்படி விடுதலை பத்திரம் எழுதிக்கொடுக்கும் போது எனது பாட்டி உயிருடன் இருந்தார். மேற்படி விடுதலை பத்திரத்தில் எனது பாட்டி எவ்வித சாட்சி கையெழுத்தும் போடவில்லை

என்றால் சரிதான். மேற்படி விடுதலை பத்திரம் எனது சித்தப்பா எனது தகப்பனாருக்கு எழுதிகொடுக்கவில்லை என்றும், பெயர் ஒற்றுமையுடைய நபர்களுக்கிடையே பதிவான கோ.சா.ஆ.7 ஆவணத்தை நான் தவறாக தாவா வழக்கில் காட்டி கட்சி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.